## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## &
## இந்திய வானிலைத் துறை
### வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை
### திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
### (29.03.2025 முதல் 02.04.2025)

**அறிக்கை எண் 026/2025** **தேதி.01.04.2025**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 41°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 20°செ முதல் 28°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 22°செ முதல் 26°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் பரவலாக மழை பெறப்படவில்லை.

**திருப்பூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை**

திருப்பூர் மாவட்டத்தின் 28.03.25 முதல் 31.03.25 வரையிலும் பகல்நேரவெப்பநிலை் 36°செ முதல் 38°செ ஆகவும் இரவுநேரவெப்பநிலை 22°செ முதல் 25°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 78 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 24 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 09-13 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் காற்று கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்த வார வானிலை (28.03.2025 முதல் 31.03.2025) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 06.04.2025- 08.30 வரை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 28/03 | நாள்-2 29/03 | நாள்-3 30/03 | நாள்-4 31/03 | தேதி | நாள்-1 02/04 | நாள்-2 03/04 | நாள்-3 04/04 | நாள்-4 05/04 | நாள்-5 06/04 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 11 | 44 | 26 | 24 |
| 36 | 38 | 38 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 37 | 36 | 35 | 34 | 33 |
| 25 | 25 | 23 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 25 | 24 | 23 | 22 | 22 |
| 5 | 4 | 3 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 1 | 7 | 8 | 8 | 8 |
| 77 | 78 | 52 | 71 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 80 | 70 | 70 |
| 29 | 24 | 25 | 26 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 30 | 40 | 50 | 40 | 40 |
| 6 | 12 | 13 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 8 | 6 | 8 | 8 | 10 |
| 90 | 90 | 90 | 90 | திசை | 110 | 140 | 270 | 230 | 250 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (02.04.2025 முதல் 06.04.2025)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த 03.04.25 முதல் 06.04.25 வரை நான்கு நாட்களுக்கு மிதமானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ முதல் 37°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ முதல் 25°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 30 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 06-10 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். பெரும்பாலும் காற்று தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

***வானிலை முன்னெச்சரிக்கை***

*இந்த வாரம் **3** நாட்களுக்கு **(04.04.25** மற்றும் **06.04.25)** இடி மின்னலுடன் மிதமானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. **02.04.25** முதல் **03.04.25** வரை ஆகிய இரண்டு நாட்களுக்கு வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது.*

***வேளாண்மையில் வானிலை முன்னெச்சரிக்கை அறிவுரை***

*இடியுடன் கூடிய மழை மற்றும் மின்னல் எதிர்பார்க்கப்படுவதால் கால்நடைகளை உயரமான மரங்கள் மற்றும் கட்டிடங்களுக்கு கீழ் கட்ட வேண்டாம்.*

*வயல்களில் போதுமான வடிகால் வசதியினை ஏற்படுத்தவும். மழை நாட்களில் உரங்கள் மற்றும் பூச்சி கொல்லி மற்றும் களைக்கொல்லிகள் தெளிப்பதைத் தவிர்க்கவும். மழை அல்லாத நாட்களில் தெளிக்கவும்.*

***வேளாண் அறிவுரைகள்***

| | | |
|---|---|---|
| *பொது அறிவுரை* | | *ஏப்ரல் **3 - 5** தேதிகளில் மேற்கு மண்டலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மிதமானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. காற்றின் வேகம் மணிக்கு **06-10** கிமீ வரை எதிர்பார்க்கப்படுகிறது.*<br>*அனைத்து இறவைப் பயிர்களுக்கும் பாசனம் செய்வதனை ஒத்திவைக்கவும்.*<br>*மழை எதிர்பார்க்கப்படுவதால் உடனடியாக சரிவுக்கு குறுக்காக மண்புரட்டிவிடும் கலப்பை மூலம் கோடைஉழவு செய்து மழைநீரினை சேமிப்பதுடன் மண் அரிப்பினையும் தடுக்கலாம்.* |
| *கம்பு* | ***நிலம் தயாரித்தல்*** | *ஏப்ரல் முதல் வாரத்தில் கம்பு விதைப்பிற்காக தயாரித்த நிலங்களில் விதைப்பு செய்யலாம்.* |
| *காய்கறிகள் மற்றும் பூக்கள்* | ***வளர் மற்றும் பூக்கும் பருவம்*** | *மழை எதிர்பார்க்கப்படுவதால் சாறு உறிஞ்சும் பூச்சிக்கான மருந்து தெளிப்பினை ஒத்திவைக்கவும். மழை நின்ற பிறகு ஸ்பைனாட்ரம்* 11.70% SC @ 450ml / ha *தெளிக்கவும்.* |
| *மரவள்ளி கிழங்கு* | ***நிலம் தயாரித்தல்*** | *ஏப்ரல் மாதத்தில் மானாவரி மரவள்ளி கிழங்கு குச்சிகளை நடுவதற்கு தயாரித்த நிலங்களில் நடவு செய்யலாம்.* |
| *தென்னை* | | *அனைத்து மரப்பயிர்களுக்கும் தூரிலிருந்து **1.5** தூரத்தில் உள்நோக்கிய வட்டப்பாத்தி அமைத்து கோடை மழையினை வேர்பகுதியல் சேமிக்கவும்.*<br>*தென்னைமரம் ஒன்றிற்கு **100** லிட்டர் தண்ணீர்வீதம் சொட்டுநீர்பாசனம் மூலம் அளிக்கவும். வட்டப்பாத்தியில் பயிர்கழிவு மூடாக்கு இட்டு நீர் ஆவியாதலை தடுக்கவும்.*<br>*அதிக வெப்பநிலை காரணமாக ரூகோஸ் வெள்ள ஈ தாக்கம் அதிகரிக்கிறது. ரூகோஸ் சுருள் ஈ மேலாண்மை செய்ய கீழ்கண்ட மேலாண்மை முறைகளை கையாளவும்*<br>***1.*** *மஞ்சள் ஒட்டும் பொறியை* (3 x 1*அடி* / ***5*** x ***1****அடி அளவுள்ள)* *ஹெக்டருக்கு **20** என்ற அளவில் கட்டவும்.*<br>***2.*** *என்கார்சியா ஒட்டுண்ணி **100** என்ற அளவில் ஒரு ஹெக்டருக்கு விடவும்.*<br>*கிரைசோபிட் என்ற ஒட்டுண்ணி முட்டையை ஒரு ஹெக்டருக்கு **1000** என்ற எண்ணிக்கையில் இலையின் அடிப்பரப்பில் ஸ்டேப்லர் மூலம் பினைக்கவும்.* |

| | | |
|---|---|---|
| | | **வேர் வாடல்**<br>• பரிந்துரைக்கப்பட்ட உரங்களுடன் 50 கிலோ தொழு உரம் இடவும்.<br>• ஒரு மரத்திற்கு அசோஸ்பைரில்லம் 200 கிராம் + பாஸ்போ பாக்டீரியா 200 கிராம் + வேர் உட்பூசனம் 100 கிராம் + பேசில்லஸ் சப்டில்லிஸ. 200 கிராம் + டிரைக்கோடெர்மா 200 கிராம் என்ற அளவில் ஒரு வருடத்திற்கு இடவும்.<br>• வேர்பகுதியில் கோகோகான் 5 லிட்டர் திரவத்தை 150 லிட்டர் தண்ணீர் + 10 கிலோ வெல்லம் + 5 லிட்டர் தயிர் + 500 கிராம் உப்பு சேர்த்து நன்கு கலக்கி பிறகு 5 -7 நாட்கள் வைத்து பிறகு வளர்ந்த பிறகு 2 லிட்டர் நுண்ணுயிர் கலவை எடுத்து 8 லிட்டர் தண்ணீருடன் கலந்து நன்கு கலக்கி வேர் பகுதியில் ஊற்றவும். மூன்று மாத இடைவெளியில் கோகோகான் ஊற்றவும்.<br>இலை கருகல் தென்பட்டால் வேர் மூலம் 3 மில்லி ஹெக்சகோனசோல் + 200 மில்லி தண்ணீருடன் கலந்து செலுத்தவும். |
| கால்நடைகள் | | மேற்குத்தொடர்ச்சி அடிவாரங்களில் கன மழை எதிர்பார்க்கப்படுவதால் மாடுகளை அப்பகுதிகளில் மேய்சலுக்கு அனுப்பவேண்டாம். |

**குறுஞ்செய்தி**

- ஏப்ரல் 3 - 5 தேதிகளில் மழை எதிர்பார்க்கப்படுவதால் உடனடியாக சரிவுக்கு குறுக்காக மண்புரட்டிவிடும் கலப்பை மூலம் கோடைஉழவு செய்து மழைநீரினை சேமிப்பதுடன் மண் அரிப்பினையும் தடுக்கலாம்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**